# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## 2020-2021ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கை கையேடு

(ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு (Five-Year Integrated P.G. M.A. Tamil), தமிழ் முதுகலை பட்டம் (M.A. Tamil), தமிழ் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,))

## விதிமுறைகள்

### ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலை (Fiver Years Integrated P.G.)

- பள்ளிக் கல்வித்துறையினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மொழிப் பாடமாகத் தமிழ் படித்திருக்க வேண்டும்.

### தமிழ் முதுகலை (M.A. Tamil)

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

  இளங்கலை/இளமறிவியல் படிப்புகளில் மொழிப் பாடமாகத் தமிழ் படிதிருக்க வேண்டும்.

- இளநிலைப் படிப்பில் ஐந்தாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று, ஆறாம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த தேர்ச்சி மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னரே சேர்க்கை உறுதி செய்யப்படும்.

### ஆய்வியல் நிறைஞர்

- முதுநிலையில் 55% (விழுக்காடு) மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் (grade) பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல்/பழங்குடி இனத்தவர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (Non-creamy layer / மாற்றுத் திறனாளிகள் ஆகிய

பிரிவினருக்குப் பல்கலைக்கழக மானியக்குழு விதிமுறைகளின்படி விலக்கு உண்டு. இப்பிரிவினர் முதுநிலைப் பட்டப்படிப்பில் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச்சான்றிதழ் இணைத்தல் வேண்டும்).

- முதுநிலைப் பட்டப்படிப்பில் மூன்றாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று நான்காம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னர் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3+2 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

- சித்தமருத்துவம் போன்ற படிப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+5+3 என்ற கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

- நுழைவுத் தேர்வின் தகுதி அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச் சுழற்சி அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறும். நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், இளநிலை/முதுநிலைப் படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) விதிமுறைகளின்படி துறையிலுள்ள இடங்களைப் பொறுத்து மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

- நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும். நுழைவுத் தேர்வு எழுதாதவர்களின் விண்ணப்பங்கள் சேர்க்கைக்குப் பரிசீலிக்கப்படமாட்டாது.

மேற்கண்ட அனைத்துப் படிப்புகளிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பாடத்தை நடத்துவது குறித்துப் பல்கலைக்கழகம் முடிவெடுக்கும்.

## விண்ணப்பக் கட்டணம்

| பிரிவு | ஒருங்கிணைந்த முதுகலை / முதுகலை | ஆய்வியல் நிறைஞர் |
|---|---|---|
| பொதுப் பிரிவு | 200 | 300 |
| ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் | 100 | 150 |

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை www.ulakaththamizh.in இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து நிறைவு செய்த விண்ணப்பத்தினை இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்ற பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையுடன், இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை-600 113 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை என்ற பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறை இணைத்து நிறுவனத்திற்கு அனுப்பி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:** தீநுண்மிப் பரவலைக் கருத்தில்கொண்டு, விண்ணப்பத்தைப் பெறுவதற்கோ நிறைவுசெய்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கோ யாரும் நேரில் வரவேண்டியதில்லை.

விண்ணப்ப எண்:

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113
☎ : 22542992, 22540087, வலைத்தளம் : www.ulakaththamizh.in

தமிழ் முதுகலை (எம்.ஏ.) முழுநேரப் பட்டப்படிப்பு
(தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புப் பெற்றது)

**விண்ணப்பம்**

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் நிறுவனத்தில் சேர வேண்டிய இறுதி நாள் : 31.08.2020

விண்ணப்பதாரின் நிழற்படம்

1. பெயர் (தமிழில்) : ........................................

   ஆங்கிலத்தில் / பெரிய எழுத்தில் : ........................................

2. தந்தை / காப்பாளர் பெயர் : ........................................

   தந்தை / காப்பாளர் தொழில் : ........................................

3. தொடர்பு முகவரி (கைப்பேசி (ம) மின்னஞ்சல் முகவரியுடன்) :

   அஞ்சல் குறியீட்டு எண்

   நிலையான முகவரி :

   அஞ்சல் குறியீட்டு எண்

4. பிறந்த நாள் :

| நாள் | மாதம் | ஆண்டு |
|---|---|---|
| | | |

5. பாலினம் :

| ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் |
|---|---|---|

6. தேசிய இனம் :

| இந்தியர் | பிறர் |
|---|---|

7. வகுப்பு :

| பிற வகுப்பு | பிற்பட்ட வகுப்பு | மிகவும் பிற்பட்ட வகுப்பு | தாழ்த்தப்பட்ட வகுப்பு | மலையினம் |
|---|---|---|---|---|
| | | | | |

   சாதி : ........................................

8. மாற்று திறனாளி : | ஆம் | இல்லை |
(ஆம் எனில் சான்று நகல்
இணைக்கப்பட வேண்டும்)

9. கல்வித் தகுதி : பயின்ற இளநிலைப் பட்டம் : ........................................

| பதிவு எண் | தேர்வுற்ற நாள் | பாடம் | பாடங்களில் பெற்ற மதிப்பெண் | | பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

10. விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு : ........................................

11. நுழைவுத் தேர்வுக் கட்டணம் செலுத்திய விவரம் : ........................................

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் மற்றும் நாள் :

விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றளிக்கப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும்
1. மதிப்பெண் பட்டியல் நகல் (10, +2, இளங்கலை) 2. மாற்றுச் சான்றிதழ் 3. சாதிச் சான்றிதழ்
4. தற்காலிகச் சான்றிதழ் (Provisional Certificate)/ பட்டமளிப்புச் சான்றிதழ் (Convocation Certificate) 5. ஆதார் நகல்

நாள் :

இடம் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

# கல்விக்கட்டண விவரம்

| வ.எண் | கட்டண விவரம் | ஒருங்கிணைந்த முதுகலை | | முதுகலைத் தமிழ் | முதுநிலைப் படிப்புகள் | | ஆய்வியல் நிறைஞர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தமிழ் | வரலாறு | | கலை | அறிவியல் | கலை | அறிவியல் |
| 1. | சேர்க்கைக் கட்டணம் | 100 | 100 | --- | 100 | 100 | 300 | 300 |
| 2. | சிறப்புக் கட்டணம் | 500 | 500 | --- | 500 | 500 | 300 | 300 |
| 3. | பயிற்றுக் கட்டணம் | 750 பருவக் கட்டணம் | 750 பருவக் கட்டணம் | --- | 1000 பருவக் கட்டணம் | 1000 பருவக் கட்டணம் | 2000 ஆண்டுக் கட்டணம் | 2000 ஆண்டுக் கட்டணம் |
| 4. | நூலகக் கட்டணம் | 200 | 200 | 250 | 250 | 250 | 300 | 300 |
| 5. | கணிப்பொறிக் கட்டணம் | 100 | 100 | 200 | 200 | 200 | 150 | 150 |
| 6. | விளையாட்டுப்போட்டி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 7. | காப்புத்தொகை (திரும்பப் பெறத்தக்கது) | 500 | 500 | 500 | 500 | 500 | 500 | 500 |
| 8. | நூலகக் காப்புத்தொகை (திரும்பப் பெறத்தக்கது) | --- | --- | 500 | 500 | 500 | 500 | 500 |
| 9. | நாட்டு நலப்பணி, இளைஞர் நலம், கலை மற்றும் பண்பாடு | 50 | 50 | 100 | 100 | 100 | --- | --- |
| 10. | சோதனைக்கூடக் கட்டணம் | -- | -- | -- | -- | 2000 | --- | 1000 |
| 11. | இணையதள / அடையாள அட்டை | 100 | 100 | 150 | 150 | 150 | 150 | 150 |
| 12. | பிற பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 200 | 200 | 200 | 200 | 200 |
| 13. | இந்தியாவின் பிற மாநிலப் பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 1000 | 1000 | 1000 | 1000 | 1000 |
| 14. | வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 |
| 15. | முன்னாள் மாணவர் சங்கம் | 200 | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| 16. | வெளிநாட்டு மாணவர்களுக்கான சேர்க்கைக் கட்டணம் | | | 10000 | 10000 | 10000 | 15000 | 15000 |